දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone } 021-222 2235

ෆැක්ස් / பெக்ஸ் / Fax } 021-222 2355

E.mail: gajaffna@sltnet.lk

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. } JK / PROC / QU /III/ 19

ඔබේ අංකය / உமது எண் / Your No. }

දිනය / திகதி / Date } 06.02.2019

**Web Page**

.......................................................................
........................................................
........................................................
---------------------------------------------

வாகன பற்றிகளுக்கான கூறுவிலை கோரல்

மாவட்ட செயலகப் பாவனைக்கான வாகன பற்றறிகள் (**Sealed Type Gel Battery**) கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இதற்கான தங்கள் கூறுவிலையினை 2019.02.20 ஆந் திகதி 2.30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வாகன பற்றறிகள் கொள்வனவுக்கான கூறுவிலை"** எனக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு அல்லது நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்வி 2019.02.20 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும் அதன் போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமூகமளிக்கலாம்.

நிபந்தனைகள்

1. தங்களது வியாபாரப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட வியாபாரத் தன்மைக்கு அமைவாக, மாவட்டச் செயலகத்தில் தாங்கள் குறித்த பொருட்களுக்கு வழங்குநராக பதிவு செய்திருந்தால் மட்டுமே கூறுவிலைகள் சமர்ப்பிக்க முடியும்.
2. வாகன பற்றறிகளுக்கு Sealed Type Gel வகைகளுக்கு மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கவும்.
3. வழங்கல் கட்டளை கிடைக்கப்பெற்ற இரு நாட்களுக்குள் பொருட்களை உரிய செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.
4. தங்களால் வழங்கப்படும் பொருட்கள் அனுமதிக்கப்பட்டிருக்கும் மாதிரிக்கு அமைவாகவும், செயலகத்தால் வழங்கப்பட்ட Specification இற்கு அமைவாகவும் இல்லாதவிடத்து எவ்வித கொடுப்பனவுமின்றி மீள ஒப்படைக்கப்படும்.
5. பொருட்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவராக இருப்பின், அந்நிறுவனத்தினருக்கு யாழ் மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருப்பது கட்டாயமானது.
6. கூறுவிலைகள் 01.03.2019 தொடக்கம் 31.08.2019 வரை 06 மாதகாலத்திற்கு வலுவுள்ளதாக இருக்கும்.
7. தங்களால் வழங்கப்பட்ட கூறுவிலைகளில் வலுவான காலப்பகுதிக்குள் தகுந்த காரயங்களின்றி விலை மாற்றம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் உரிய காலப்பகுதிக்குள் எம்மால் வழங்கு கட்டளை சமர்ப்பித்ததன் பின்னர் பொருட்கள் வழங்கப்படாது விடுமிடத்து தாங்கள் தொடர்ந்து வரும் காலங்களில் கேள்வி நடைமுறைகளில் இருந்து நீக்கப்படுவீர்கள்.
8. தங்களது நிறுவன முகவரியில் மாற்றம் ஏற்படின் உடன் அறியத்தருதல் வேண்டும்.
9. பொருட்களுக்கான விலைகளினைக் குறிப்பிடும் போது வற் பெறுமதி தவிர்ந்த விலையினைக் (Without Vat) குறிப்பிடவும்.
10. தாங்கள் வற்(VAT) செலுத்துபவராக இருப்பின் **கட்டாயமாக** வற் இலக்கம் மற்றும் சான்றிதழின் பிரதி அத்தோடு பெறுமதி சேர் வரி (Vat) **செயற்பாட்டில் உள்ளமை** தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட கடிதம் என்பன இணைக்கப்படல் வேண்டும்.
11. குறித்தவொரு கூறுவிலையினை ஏற்றுக்கொள்வதோ, நிராகரிப்பதோ பெறுகைக்குழுவின் தீர்மானமாகும்

கூறுவிலைகளுக்கான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ம.சிவகுமார்,
கணக்காளர்(பெறுகை)
மாவட்ட செயலாளருக்காக,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

ம. சிவகுமார்
கணக்காளர் (பெறுகை)
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருக்காக
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்

## Quotation for Vehicle Battery - Sealed Type Gel Battery

| S. No. | Details | Make/ Type | Qty. | Unit Price (Without Vat) | Vat |
|---|---|---|---|---|---|
| 1. | Battery – 120Amp | | 1 | | |
| 2. | Battery – 100Amp | | 1 | | |
| 3. | Battery – 90Amp | | 1 | | |
| 4. | Battery – 80Amp | | 1 | | |
| 5. | Battery – 70Amp | | 1 | | |
| 6. | Battery – 45 Amp | | 1 | | |
| 7. | Battery – 5 Amp, 12V (Motor cycle) | | 1 | | |

மாவட்டச் செயலகத்தால் பொருட்கள் சேவைகள் வழங்குநராக பதிவு செய்யப்பட்ட போது வழங்கப்பட்ட பதிவு இல :- ...............................................................

வற் வரி செலுத்துபவராக இருப்பின் வற் இல : .........................................

தங்களால் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும். இந்நடைமுறைகளில் இருந்து நான் தவறும் பட்சத்தில் கேள்வி கோரலிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன் எனவும், என்னால் வழங்கப்பட்ட கூறுவிலைகளுக்கமைவாகவும் விபரணங்களுக்கமைவாகவும் பொருட்களை தாங்கள் கோரிக்கையிடும் போது வழங்க சம்மதிக்கிறேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:...........................

.....................................
Signature & Rubber Stamp